பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
31 08 2026 MONDAY 6 45

தலைப்புச் செய்திகள்

- பிரதமர் திரு. நரேந்திர மோடி கிர்கிஸ்தானில் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் மாநாட்டில் இன்று பங்கேற்கிறார்.
- அலங்கார வண்ண மீன்வள மேம்பாட்டிற்கான செயல்திட்டத்தை குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி.ராதாகிருஷ்ணன் இன்று வெளியிடுகிறார்.
- தமிழகத்தின் கடன் சுமையை தவெக அரசு மேலும் அதிகரித்துள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.
- கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை மீண்டும் திறக்க வேண்டுமென மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் திரு.சண்முகம் கேட்டுக்கொண்டுள்ளார்.
- ஆசிய கோப்பை மகளிர் டுவென்டி டுவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 94 ரன் வித்தியாசத்தில் தாய்லாந்தை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி கிர்கிஸ்தானில் அரசு முறை பயணத்தை முடித்துக்கொண்டு கிர்கிஸ்தான் சென்றடைந்துள்ளார்.

அங்கு இரண்டு நாட்கள் தங்கும் பிரதமர் அந்நாட்டு தலைநகர் பிஷ்கெக்கில் இன்றும் நாளையும் 26-வது ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளார்.

விமான நிலையத்தில் அவரை கிர்கிஸ்தான் அமைச்சரவையின் தலைவர் திரு. Kasymaliev Adylbek அலியோவிச் வரவேற்றார்.

பிரதமரை வரவேற்பு அளிக்கும் வகையில் பாரம்பரிய கிர்கிஸ் நடன நிகழ்ச்சியும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதிபர் சாதீர் ஜபரோவின் அழைப்பை ஏற்று திரு. மோடி கிர்கிஸ்தானுக்கு சென்றுள்ள பிரதமர் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் மாநாட்டின் இடையே இந்த அமைப்பில் இடம் பெற்றுள்ள நாடுகளின் தலைவர்களையும் சந்திப்பார்என்றுஎதிர்பார்க்கப்படுகிறது.

"பயங்கரவாதம், பிரிவினைவாதம் மற்றும் தீவிரவாதம்" ஆகியவற்றிலிருந்து விடுபட்ட ஒரு பிராந்தியத்தை உருவாக்க ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உறுப்பினர்களுடன் இணைந்து இந்தியா செயல்படும் என்றும் அவர் கூறினார்.

*கிர்கிஸ்தானில் 6-வது உலக நாடோடி விளையாட்டுகளின் தொடக்க விழாவிலும் திரு. நரேந்திரமோடி கலந்துகொள்கிறார்.*

*இந்த நிலையில் பிரதமரின் இந்த பயணம் குறித்து வெளியுறவுத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்தப் பயணம் மத்திய ஆசியாவில் இந்தியாவின் ஒத்துழைப்பை வலுப்படுத்தும் என்றும், இப்பகுதியுடனான இந்தியாவின் தொடர்புகளை பலப்படுத்தும் என்றும் கூறியுள்ளது.*

*அமைதி, ஸ்திரத்தன்மை மற்றும் செழிப்பை நோக்கிய நமது கூட்டு முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் 25 ஆண்டுகள்: நிலையான அமைதி, வளர்ச்சி மற்றும் செழிப்பை நோக்கி ஒன்றாக" என்பது இந்த மாநாட்டின் கருப்பொருளாகும்.*

*பயங்கரவாதத் தடுப்பு, பிராந்திய ஸ்திரத்தன்மை மற்றும் எல்லை தாண்டிய அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதில் ஒருங்கிணைந்த செயல்படுவது குறித்து இந்த மாநாட்டின் முக்கியமாக விவாதிக்கப்படவுள்ளது.*

<<<<<<>>>>>>

*தமிழகத்தின் கடன் சுமையை தவெக அரசு மேலும் அதிகரித்துள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.*

*வேலூரில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தின் கடன் சுமை பல லட்சம் கோடி ரூபாயை தாண்டியுள்ளதாக தெரிவித்தார்.*

*அரிசி, சர்க்கரை, புளி, பருப்பு, சமையல் எண்ணெய் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதாகவும் அவர் கூறினார்.*

*மாநில அரசின் கவனத்திற்கு கொண்டு சென்ற பின்னரும், விலை உயர்வை கட்டுப்படுத்து நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் இதனால், ஏழை மற்றும் நடுத்தர மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.*

*துறைவாரியாக தனித்தனி அமைச்சர்கள் இருந்தாலும், சட்டப்பேரவையில் எதிர்கட்சிகள் கேள்வி எழுப்பும்போது, சம்மந்தப்பட்ட துறை அமைச்சர்கள் பதிலளிப்பதில்லை என்றும் ஒரு சில அமைச்சர்கள் மட்டுமே பெரும்பாலான துறைகளின் கேள்விகளுக்கு பதிளலிப்பதாகவும் திரு. எடப்பாடி பழனி சாமி கூறினார்.*

<<<<<<>>>>>>

தமிழகத்தில் மூடப்பட்டுள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை மீண்டும் திறக்க வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யுனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் திரு.சண்முகம் கேட்டுக்கொண்டுள்ளார்.

திருத்தணியில், நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை உட்பட பல சர்க்கரை ஆலைகள் நவீனப்படுத்தப்படாத காரணத்தால் அதன் உற்பத்தி திறன் குறைந்துள்ளது என்று கூறினார்.

ஆலைகளுக்கு கொண்டு வரப்படும் கரும்பு உரிய காலத்தில் அரைக்கப்படாத காரணத்தால், விவசாயிகள் பாதிக்கப்படுவதாகவும், இதன் காரணமாக மாநிலம் முழுவதும் கரும்பு சாகுபடி பரப்பளவு குறைந்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

தாம்பரத்திலிருந்து தென் மாவட்டங்களுக்கு செல்லும் வாரந்திர 14 சிறப்பு ரயில்களின் சேவை நீட்டிக்கப்பட்டுள்ளதாக தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

தாம்பரத்திலிருந்து போடிநாயக்கனூருக்கு செல்லும் சிறப்பு விரைவு ரயில், செப்டம்பர் 12 ஆம் தேதி முதல் 26 ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

போடிநாயக்கனூரிலிருந்து தாம்பரத்திற்கு வாரந்தோறும் இயக்கப்படும் சிறப்பு ரயில் செப்படம்பர் 13 ஆம் தேதி முதல் 27 ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

சென்னை எழும்பூரி-கன்னியாகுமரி சிறப்பு ரயில் செப்டம்பர் 4 ஆம் தேதி முதல் 25 ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி-எழும்பூர் விரைவு ரயில் செப்டம்பர் 6ஆம் தேதி முதல் 27 ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி-தாம்பரம் விரைவு ரயில் செப்டம்பர் 6 ஆம் தேதி முதல் 27 ஆம் வரையும், திருநெல்வேலி-தாம்பரம் சிறப்பு ரயில் செப்டம்பர் 3 ஆம் தேதி முதல் 24 ஆம் தேதி வரையும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

மங்களுரு-சென்னை சென்ட்ரல் இடையே இயக்கப்படும் வாரந்திர விரைவு ரயில் செப்டம்பர் 28 ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

சென்னை எழும்பூர்-மங்களுரு விரைவு ரயில், செப்டம்பர் 8 ஆம் தேதி முதல் 29 ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது என்று தெற்கு ரயில்வே செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

அலங்கார வண்ண மீன்வள மேம்பாட்டிற்கான செயல்திட்டத்தை குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி.ராதாகிருஷ்ணன் இன்று வெளியிடுகிறார்.

லட்சத்தீவில் நடைபெறும் விழாவில் மத்திய மீன்வளத்துறை அமைச்சர் திரு.ராஜீவ் ரஞ்சன் சிங், இணையமைச்சர் திரு.எல்.பி.சிங் பாகேல் ஆகியோர் கலந்துகொள்கிறார்கள்.

நாட்டில் வண்ண அலங்கார மீன்களை பிடித்தல், வளர்த்தல் மற்றும் சந்தைப்படுத்துதலை ஊக்குவிக்க லட்சத்தீவு கடல்சார் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள ஏராளமான அலங்கார வண்ண மீன்கள் சுற்றுச்சூழலை பாதுகாப்பதோடு மீனவர்களின் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்துகிறது.

அலங்கார வண்ண மீன்வளத்தை பெருக்க அறிவியல் முறையில், மேலாண்மை மற்றும் தரக்கட்டுப்பாடுகளை உறுதி செய்ய செயல்திட்டத்தை மத்திய அரசு வகுத்துள்ளதாக மீன்வளத்துறை தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

சென்னையிலிருந்து நேற்று 166 பயணிகளுடன் அந்தமான் சென்ற தனியார் நிறுவன விமானம் அங்கு மோசமான வானிலை காரணமாக தரையிறங்க முடியாமல் மீண்டும் சென்னைக்கே திரும்பியது.

அந்தமானில் கடுமையான சூறைக்காற்று வீசியதால், தரையிறங்க முடியாமல், அந்த விமானம், நீண்ட நேரம் வானில் வட்டமடித்து கொண்டிருந்தது.

வானிலை சீரடையாத காரணத்தால், சென்னை திரும்பிய விமானம் இன்று காலை சிறப்பு விமானத்தின் மூலம் பயணிகள் அந்தமான் அழைத்து செல்லப்படுவார்கள் என்று விமானநிலையம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

வடகிழக்குப் பருவமழையை எதிர்கொள்ளும் வகையில், சென்னை மாநகராட்சி நகரில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

சென்னை ஆற்காடு சாலை, விருகம்பாக்கம், போரூர் சந்திப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் இப்பணிகளை நேற்று நேரில் ஆய் வு செய்த மண்டல கண்காணிப்பு அதிகாரி திருமதி விஜயா ராணி, வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கு முன்னதாகவே அனைத்துப் பணிகளையும் விரைந்து முடிக்க வேண்டும் என்று அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இப் பகுதிகளில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள், மவுண்ட் பூந்தமல்லி சாலையில் சென்னை மெட்ரோ ரயில் கட்டுமான பணிகள் நடைபெறும் இடங்களில் மீண்டும் மழைநீர் வடிகால் கட்டும் பணியையும் அவர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பருவமழையின போது, அவசர நடவடிக்கைகளுக்காக மோட்டார் பம்புகள், இயந்திரங்கள் மற்றும் வாகனங்களை தயார் நிலையில் வைத்திருக்கவும் அவர் அதிகாரிகளை கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>>

அமெரிக்காவுடன் பொருளாதார உறவுகளை கனடா துண்டித்தால் கடும் விளைவுகள் ஏற்படும் என்று அதிபர் டோனல்ட் டிரம்ப் எச்சரித்துள்ளார்.

<<<<<<>>>>>>

ஈரானில் எண்ணெய் வளமிக்க Larak தீவின் மீது அமெரிக்க விமானப்படை மீண்டும் தாக்குதலை நடத்தியுள்ளது.

<<<<<<>>>>>>

முப்படைகளுக்கும், பொதுமக்களுக்கும் இடையே தொடர்பை ஏற்படுத்தும் வகையில் சென்னையில் உள்ள போர் நினைவு சின்னத்தில், ஒலி ஒளி காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

சத்திஷ்கர் மாநிலத்தில் பாதுகாப்பு படையினர் நேற்று மேற்கொண்ட சோதனையின்போது, நக்சல் தீவிரவாதிகளின் மறைவிடம் கண்டுபிடிக்கப்பட்டு, அங்கிருந்து ஏராளமான வெடிமருந்துகளை பறிமுதல் செய்தனர்.

<<<<<<>>>>>>

திண்டுக்கல்லில் நேற்று ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்த 4 குழந்தைகளின் குடும்பத்தினருக்கு தலா 4 லட்சம் ரூபாய் நிவாரணம் வழங்க முதலமைச்சர் திரு.விஜய் உத்தரவிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

கிருஷ்ணகிரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில், கூடுதல் வசதிகள் செய்துதரப்படும் என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.அருண்குமார் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

*செங்கல்பட்டு நகராட்சி அலுவலகம் எதிரே பழைய ஜிஎஸ்டி சாலையில், வாகன உதிரிபாகங்கள் விற்பனை கடையில், நேற்று இரவு ஏற்பட்ட தீயை தீயணைப்பு துறையினர் கடுமையாக போராடி கட்டுப்படுத்தினர்.*

<<<<<<>>>>>>

*திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் ஆவணி திருவிழா இன்று அதிகாலை கொடி ஏற்றத்துடன் தொடங்கியது.*

<<<<<<>>>>>>

*ராணிப்பேட்டை மாவட்டம் ஆர்காடு அருகே வாகன தணிக்கையில் சுமார் 2 கிலோ போதைப்பொருளை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.*

<<<<<<>>>>>>

*ஆசிய கோப்பை மகளிர் டுவென்டி டுவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 94 ரன் வித்தியாசத்தில் தாய்லாந்தை வென்றது.*

*துபாயில் நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில், முதலில் விளையாடிய இந்தியா, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 9 விக்கெட் இழப்பிற்கு 159 ரன் எடுத்தது.*

*துவக்க ஆட்டக்காரர்களில் ஒருவர் ஆன ஷபாளி வர்மா 64 ரன்களே எடுத்தார்.*

*160 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய தாய்லாந்து அணி 16 புள்ளி 1 ஓவரில் 65 ரன்னுக்கு ஆட்டம் இழந்தது.*

<<<<<<>>>>>>

*20 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசியக் கோப்பை கால்பந்து போட்டிக்கான, தகுதி சுற்று ஆட்டத்தில் இந்தியா இன்று சிரியாவை எதிர்கொள்கிறது.*

*இந்தப் போட்டி தாஷ்கண்டில் இன்று நடைபெற உள்ளது.*

<<<<<<END>>>>>>